சிறப்பிதழ்
Special Issue

*Chief Editor*
*Dr. M. Sadik Batcha*

*Advisory Editor*
*Dr. N. Chandra Segaran*

*Editorial Board*
*Dr. MAM. Rameez*
*Dr. Jeyaraman*
*Dr.A. Ekambaram*
*Dr. G. Stephen*
*Dr. S. Chitra*
*Dr. S.Senthamizh Pavai*
*Dr. A. Shunmughom Pillai*
*Dr. P. Jeyakrishnan*
*Dr. Seetha Lakshmi*
*Dr. S. Easwaran*
*Dr. Kumara Selva*
*Dr. Ganesan Ambedkar*
*Dr. Krishanan*
*Dr. Kumar*
*Dr. S. Kalpana*
*Dr. T. Vishnukumaran*
*Dr M. N. Rajesh*
*Dr. Govindaraj*
*Dr. Uma Devi*
*Dr. Senthil Prakash*
*Dr. Pon. Kathiresan*
*Dr. S. Vignesh Ananth*
*Dr.M. Arunachalam*
*Dr. S. Bharathi Prakash*

01 மார்கழி 2052
16th December 2021

ISSN : 2321 - 984X

# நவீனத் தமிழாய்வு

*(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் ஆய்விதழ்)*

*Journal of*

# Modern Thamizh Research

*(A Quarterly International Multilateral Thamizh Journal)*

Arts and Humanities (all), Language
Literature and Literary Theory, Tamil
UGC Care Listed (Group-I) Journal

பன்னாட்டு கருத்தரங்கம் -2021
சிறப்பிதழ் : தமிழ்த்துறை
நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,
பொள்ளாச்சி - 642 001, தமிழ்நாடு, இந்தியா

## தமிழ் இலக்கியங்களில் சொல்வளமும் பொருள்வளமும்

சிறப்பிதழ் ஆசிரியர்

Special Issues Editor
முனைவர் பா. அருள்ஜோதி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை

*Published by*
RAJA PUBLICATIONS
10, (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Thamizh Nadu, India.
Mobile : +91-9600535241
website : rajapublications.com

35

சிறப்பிதழ்
**Special Issue**

**01 மார்கழி 2052**
**16th December 2021**

**ISSN : 2321 - 984X**


| | | | |
|---|---|---|---|
| 1. | த. தினேஷ் | சங்க இலக்கியத்தில் நிலக்கிழாரியம் | 1-6 |
| 2. | ப.இராமகிருஷ்ணன் | தொல்காப்பியர் காட்டியுள்ள கிட்டலாகாப் பொருள்கள் தொல்காப்பியம் கூறும் பொருள்கள் | 7-9 |
| 3. | மு. சித்ரா தேவி | தொல் தமிழரின் உணவு வகைகளும் சொல்லாடல் திறனும் | 10-16 |
| 4. | சி.ரா.சுரேஷ் | சின்னப்பபாரதி படைப்புகளில் மனித நேயம் | 17-23 |
| 5. | செ. நாகேஸ்வரி | கண்மணி குணசேகரன் சிறுகதையின் சொல்வளத்தில் வறுமையின் அவலங்கள் | 24-31 |
| 6. | சு.அப்பாசாமி & ரு. அசோகன் | தொல்காப்பியம் கூறும் காஞ்சித் திணை புறப்பொருள் வெண்பாமாலை கூறும் காஞ்சித் திணை ஒப்பீடு | 32-38 |
| 7. | இரா.பிரீத்தி | தமிழ் இலக்கியங்களும் முருகக்கடவுளும் | 39-41 |
| 8. | சா.சிவா & சொ.மகாதேவன் | இறைவழிபாட்டில் அறிவியல் சார்ந்த சொல்லாட்சி | 42-45 |
| 9. | க. தேவி & சீ மேபெல் ஜோதி ராணி | நான் என்னும் புதினத்தில் பேயோட்டல் நிகழ்வு | 46-54 |
| 10. | ந.மகாதேவி | கொங்குநாட்டுக் கல்வெட்டுகளில் நீர்மேலாண்மையும் வேளாண்மையும் | 55-62 |
| 11. | கு.பரமேசுவரன் | அம்சப்ரியா கவிதைகளில் மனிதநேய தேடல் | 63-69 |
| 12. | வ. பூங்கொடி | திருமந்திரத்தில் காலமும் நிகழ்வும் (பக்திஇலக்கியம்) | 70-75 |
| 13. | கா.உமாராஜ் | தொல்காப்பியத்தில் இடைச்சொற்கள் | 76-81 |
| 14. | மு.கீதா | மெய்பெறு மரபிற் தொடை வகைத் தாமே - நூற்பாவின் மூலப்பொருண்மை மீட்டுருவாக்கம் | 82-88 |
| 15. | ஐ.க.விஜி | சங்க இலக்கியத்தில் கொடையும் அறமும் | 89-92 |
| 16. | அ. கோகுல்கண்ணன் | திருக்குறள் - நீதிநூல் ஒப்பீட்டாய்வு | 93-98 |
| 17. | த.ரா. உதயகுமாரி | சங்க காலமும் மனிதநேயமும் | 99-102 |
| 18. | மு.வடிவேல் & ஜெ.அமிதா டார்வின் | பத்தொன்பதாம் நூற்றாண்டு நாடக மேடையும் வடிவமைப்பும் | 103-109 |
| 19. | பி.வீ.ஶ்ரீதேவி | ஜெயமோகன் புதினங்களில் நாஞ்சில் வட்டார வழக்குச் சொற்கள் | 110-114 |
| 20. | இர. கண்ணதாசன் | செய்யுள் புற வடிவ உறுப்புகளும் சங்க இலக்கியப் பாடுபொருளும் - ஓர் அறிமுகம் | 115-121 |
| 21. | மு.லோகநாயகி | கவிஞர் குலோத்துங்கனின் மானுட யாத்திரையில் சொல்லாக்கம் | 122-126 |
| 22. | செ.ரெ. ஜெஸ்லின் சஜி | புறப்பொருள் வெண்பாமாலையில் சொல்வளம் | 127-130 |
| 23. | ச. குமார் | சைவக் குரவர்கள் பார்வையில் இறையடி | 131-135 |
| 24. | செ.கற்பகம் | சிலப்பதிகார அரங்கேற்று காதை காட்டும் நாட்டிய சொல் வளம் | 136-140 |
| 25. | மி. ஜென்ஸிஸ் குமார் | தமிழ்ச் சொற்கள் வழக்கிழப்பின் பின்னணியில் புதிய வரலாறெழுதியல் | 141-145 |
| 26. | தி.திவ்யா | தேவார மூவர் வரலாற்றில் திருவாமாத்தூர் | 146-149 |
| 27. | ஞா. ஷைனி | மலர்வதியின் சிறுகதைகளில் குடும்பச் சிக்கல்கள் | 150-154 |
| 28. | ஆ.மணிகண்டன் | சபரிமலை யாத்திரையில் ஐயப்ப வழிபாடும் சடங்கு முறைகளும் | 155-160 |
| 29. | மு.துர்கா | திவ்வியப் பிரபந்தத்தில் சுட்டு அடைத்தொடரும் யாப்பு கட்டமைப்பும் | 161-170 |
| 30. | ஜா.பீற்றர் ராஜ் & தா.திருநாவுக்கரசு | வேளாண்மைச் சடங்குகளில் மந்திரம் | 171-174 |
| 31. | அ.சவரிராயம்மாள் | எட்டுத்தொகை அகப்பாடல்களில் தெய்வமகளிரும் பிறமகளிரும் | 175-180 |
| 32. | பா.புவனேஸ்வரி | தமிழ் இலக்கியங்களில் சொல்வளம்- தாவரம் என்னும் பொருண்மையில் | 181-187 |
| 33. | பூ.பூங்குழலி | சங்க இலக்கியத்தில் தலைவியின் ஆளுமைத்திறம் | 188-192 |
| 34. | ந.கல்பனா & இரா.சிவசங்கரி | சங்கப் பனுவல்களில் சூழலியல்சார் புழங்குப்பொருட்கள் | 193-200 |
| 35. | பெ. ஜெகதாம்பாள் | புறநானூற்றில் மூதின்மகளிர் பாடல்களின் நோக்கும் போக்கும் | 201-206 |
| 36. | ஆர். முத்துராஜன் | காமஞ்சேர் குளத்தாரும் சொல் வளமும் | 207-214 |
| 37. | செ.லீ. ஹெலன் ஜெபா றோஸ் | தமிழ்க் காப்பு இயத்தில் சொல் வளம் | 215-218 |
| 38. | இராணி. இரா | தற்கால வழக்கில் அருகிப்போன ஐங்குறுநூற்றுச் சொற்கள் | 219-223 |
| 39. | பா.றோ.சுபத்ரா | நேசத்துணை நாவலில் மொழிநடைக் கூறுகள் | 224-228 |
| 40. | ம.மீனாட்சி | இராஜம் கிருஷ்ணனின் பரிசு பெற்ற புதினங்களில் சொல் ஆளுமை | 229-237 |
| 41. | மா.ஜெ.சசிக்குமார் & பே.மஹேஸ்வரி | தமிழ் இலக்கியங்களில் சிலம்பம் - சொல்லாய்வு | 238-242 |
| 42. | ஆ.அனிதா & சோ. பத்மாவதி | சிறைக்குடி ஆந்தையார் பாடலில் புனைகதை எடுத்துரைப்பியல் | 243-247 |
| 43. | பா.அருள்ஜோதி | புறப்பொருள் வெண்பாமாலைகாட்டும் மறவர் - சொல்லாய்வு | 248-252 |
| 44. | ஆ.ராஜேஸ்வரன் | சங்க இலக்கியத்தில் ஞாழல் | 253-258 |
| 45. | ரா.மேரிஜான்சி & Y. ராணி | குமரி மாவட்ட நாவல்களில் காணலாகும் சொல்வளம் | 259-263 |
| 46. | ஜெ. குணசேகரன் | திருக்குறளில் அடைமொழி | 264-268 |
| 47. | த.பரமேஸ்வரன் | புலவராற்றுப்படையில் இலக்கண நய உரை | 269-274 |
| 48. | ரா நாகேந்திரன் | இளங்கோவின் சொல்வளம் | 275-280 |
| 49. | த.நாகம்மாள் | நீதி நூல்கள் கூறும் கல்வி அறம் | 281-286 |
| 50. | மா.தேவிபாலா & ஆ.அருள்தாசு | சங்க இலக்கியத்தில் முன்னோர் வழிபாடு | 287-292 |
| 51. | ம.இராஜகோபால் & த.பரமேசுவரி | தமிழ்மகன் புதினங்களில் குடும்ப உறவுகள் | 293-298 |
| 52. | து.விசாலாட்சி & த.பரமேஸ்வரி | வா.மு.கோமுவின் சிறுகதைகளில் - உறவுகளின் நிலை | 299-305 |
| 53. | ப.சசிரேகா | பெண்களின் விளையாட்டில் 'அச்சாங்கல்' | 306-310 |
| 54. | இரா. கவிதா & த.கருப்பையா | 'பள்ளிக்கூடம்' புதினத்தில் கிராமியக் கூறுகள் | 311-316 |
| 55. | ரா. விஜயலட்சுமி | தமிழ் இலக்கியத்தில் விருந்தோம்பல் பண்பு | 317-321 |
| 56. | க.விமலா | யெஸ்.பாலபாரதியின்படைப்புகளில்மதியிறுக்கம் - (AUTISM) சிலபுரிதல்கள் | 322-330 |
| 57. | மா.தினேஷ்வரன் | திருக்குறளில் கருத்துவகை வாக்கியங்களும் இலக்கணப் பொருண்மைச் சொற்களும் | 331-336 |
| 58. | ஏ.மேரிநேசபிரியம் | பதிற்றுப்பத்து-வினையெச்சம் | 337-341 |
| 59. | த.திருமாறன் | கம்பராமாயணத்தில்கலிமா,கடுமா,இவுளி | 342-351 |
| 60. | த.ப.சூரியா | தொல்காப்பிய உரியியல் உணர்த்தும் இசையுரிச்சொற்கள் | 352-358 |
| 61. | ர.பாலதரணி & க.தனலட்சுமி | ஆண்டாள் பிரியதர்ஷினி சிறுகதைகளில் பண்பாட்டுக் கட்டமைப்பு | 359-365 |
| 62. | பா.சூர்ய பிரகாஷ் & பா.அருள்ஜோதி | குறுந்தொகையில் தாவர சூழல் சொற்கள் | 366-369 |
| 63. | ம. காயத்ரி | சங்க இலக்கியத்தில் தச்சுத் தொழில்கள் | 370-373 |
| 64. | இரா.முருகன் | தமிழ் இலக்கியத்தின் தொழில்கள் | 374-377 |
| 65. | து.யோககலைவாணி & பா.அருள்ஜோதி | மனிதநேய சொற் பொருள் விளக்கம் | 378-383 |


Published by : **Raja Publications,** No. 10, Upstair, Ibrahim Nagar, Khajamalai, Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Mobile : 9600535241
Printed : **The Printing House,** Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Ph : +91 - 431-2420121

# சங்க இலக்கியத்தில் தச்சுத் தொழில்கள்

**முனைவர் ம. காயத்ரி**
உதவிப்பேராசிரியர், தமிழ் இலக்கியத்துறை,
நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி - *01.*

**ஆய்வுச்சுருக்கம்**

சங்கஇலக்கியம் என்பது ஒரு வரலாற்றுப் பெட்டகமாகும். காலத்தால் முற்பட்ட பெருமையுடையது. சங்ககால மக்கள் நிலம், நிலம்சார்ந்த வளம் மற்றும் பொருளாதார முன்னேற்றம் கண்டனர். சங்ககாலத்தில் மக்களின் தொழில்கள் நிலத்தை அடிப்படையாகக் கொண்டே மலர்ச்சியுற்றது எனலாம். அதனடிப்படையில் இயற்கை வளம் சார்ந்த சங்ககால மக்களின் தச்சுத் தொழில் குறித்து இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**முன்னுரை**

தச்சு என்பது ஒன்றையும் மற்றொன்றையும் பொருத்தி இணைக்கப்படுவதாகும். இத்தச்சுத் தொழிலைச் செய்வோர் தச்சர் எனப்பட்டனர். கல்தச்சுத் தொழில் செய்வோர் கல்தச்சர் எனவும், மரத்தச்சுத் தொழில் செய்வோர் மரத்தச்சர் எனவும் அழைக்கப்பட்டனர். இவ்விருவகைத் தச்சர்கட்கும் **கம்மாளர்** என்ற பெயரும் உண்டு. மரத்தொழில் செய்து வந்த தச்சன் சங்க காலத்து இலக்கிய வழக்கில் **மரங்கொல் தச்சன்** என அழைக்கப்பட்டுள்ளான். அவற்றை

**"மரங்கொல் தச்சர் கைவல் சிறாஅர்**
**மழுவுடைக் காட்டகத்து"**
**(புறநானூறு: *206: 11 - 12*)**

என்ற புறநானூற்று அடிகளால் 'மரங்கொல" என்பது மரத்தை வெட்டுதல் என்றப் பொருளில் அமைந்துள்ளது.

**மரத்தின் பயன்**

இயற்கையையே நம்பி வாழும் மனிதன் பன் நெடுங்காலமாகத் தன் சொந்த முயற்சியால் சிறிது சிறிதாக இயற்கையை எவ்வாறெல்லாம் பயனுள்ள வகையில் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதை அறிந்து மனிதனின் வாழ்க்கைக்கு ஏற்ப மரங்களைப் பயன்படுத்தத் தொடங்கினான்.

வீடு கட்டுவதற்கும், வண்டி, தேர் முதலிய ஊர்திகள் செய்வதற்கும், உழவுக்கருவிகள், மேசை, நாற்காலி, பத்திரிகைக் காகிதம், மருந்துப் பொருட்கள் போன்றவை செய்வதற்கும் மரங்களைப் பயன்படுத்தியுள்ளனர்.

**மரத்தொழில் செய்யும் தச்சர்கள்**

சங்க கால இலக்கியங்களில் திறமை வாய்ந்த தச்சர்கள் தன் குலத்தொழிலாகத் தச்சுத் தொழிலை மேற்கொண்டுள்ளனர். தங்கள் பிள்ளைகளை இயம் வயதிலேயே இத்தொழிலிலை நன்கு பழகச் செய்துள்ளனர்.

பொய்மைத் தேர் செய்து விளையாடியவர்கள் பின்னாளில் பெருந்தச்சர்களாகின்றனர் என்பதை

**"தச்சச் சிறார் நச்சப் புனைந்த**
**ஊரா நற்றேர்**
**(பெரும்பாணாற்றுப்படை: *248 - 249*)**

என்ற பெரும்பாணாற்றுப்படையின் அடிகளால் அறியமுடிகின்றன.

தமிழ்நாட்டுத் தச்சர்கள், மக்கள் வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களையும், வசதிக்கு ஏற்ப வண்டி, தேர் உட்பட செய்து கொடுத்துள்ளனர். நால்வகைப் படைகளில் சிறப்புப் பெற்றதாக தேர்படைக் காணப்படுகிறது. அத்தேர்ப்படைக்காக தச்சர்கள் தேர் செய்வதில் போட்டி போட்டுக்கொண்டு செய்துள்ளனர் என்பதை,

**"வைகல் எண்தேர் செய்யும் தச்சன்"**
**(புறநானூறு: 87)**

என்ற புறநானூற்று அடிகளின் வாயிலாக ஒரு நாளில் எட்டுத்தேர் செய்துள்ளனர் என்பதைக் காணமுடிகிறது.

பல வகையான வண்ணங்களில் தேர் செய்துள்ளமையை,

**"கண்ணோக் கொழிக்கும்**
**பண்ணமை நெடுந்தேர்"**
**(அகநானூறு: 234)**

என்ற அகநானூற்று அடிகளால் அறியமுடிகின்றன.

மேலும் தச்சர்களின் திறம்பாட்டை விளக்குவனவாக 'சகடம்' ஒன்றின் சிறப்பை,

**"கொழுஞ்சூட் டருந்திய திருந்துநிலை யாரத்து**
**முழவி னன்ன முழுமர வுருளி**
**எழூஉப்புணர்ந் தன்ன பரூஉக்கை நோன்பார்**
**மாரிகுன்ற மழைசுமந் தன்ன**
**ஆரை வேய்ந்த வறைவாய்ச் சகடம்"**
**(பெரும்பாணாற்றுப்படை: 46 - 50)**

என்ற பெரும்பாணாற்றுப்படையின் அடிகளில் திரண்ட வட்டையில் ஆரக்கால்கள் செருகி அமைக்கப்பட்ட சக்கரங்கள், முழு மரத்தில் கடைந்தெடுக்கப்பட்ட குடங்கள், மத்தளங்கள் போன்றனவும், ஆர்கள் குடத்திற்கும், வட்டைக்கும் இடையில் பொருத்தப்பட்டுயிருக்கிறன. அச்சு மரத்தின் மேலே நெடியவாய் இரண்டு பக்கத்தும் நெடுகக்கிடக்கின்ற பருமரங்கள் இரண்டினையும் நெருங்கத்துளைத்துக் குறுக்கே ஏணிபோலக் கோத்துப்பார் அமைத்துள்ளனர். அதன்மேலே ஆரைப் புல்லாலான கூண்டு அமைத்துள்ளதை அறியமுடிகிறது. இவற்றின் மூலம் தேர் சகடம் போன்றவற்றில் தச்சர்களின் மேம்பாட்டை அறியமுடிகிறது.

மரங்கொல் தச்சர்களில் சிலர் கலை நுணுக்கமும் பெற்றிருந்தனர் என்பதை நக்கீரனார் நெடுநல்வாடையில் குறிப்பிட்டுள்ளார். அரண்மனை மதில் கதவு, வாயிலின் நிலைக்கால் அமைப்பு, வாயில் நெடுநிலை ஆகியவற்றைக் குறித்துக் கூறுகையில் தச்சர்களின் கலை நுணுக்கத்தைக் குறிக்கின்றார் அவை,

**"ஒருங்குடன் வளைஇ ஓங்குநிலை வரைப்பில்**
**பருஇரும்பு பிணித்துச் செவ்வரக் குரீஇ**
**துணைமாண் கதவம் பொருத்தி இணைமாண்டு**
**நாளொடு பெயரிய கோளமை விழுமரத்துப்**
**போதவிழ் குவளைப் புதுப்பிடி காலமைத்துத்**
**தாளொடு குயின்ற போரமை புணர்ப்பிற்**
**கைவல் கம்மியன் முடுக்கலிற் புரைதீர்ந்து**
**ஐயவி அப்பிய நெய்யணி நெடுநிலை"**
**(நெடுநல்வாடை: 79 - 86)**

என்ற நெடுநல்வாடை அடிகளில் மிகப்பெரிய அரண்மனை வாயிற்கதவுகளை இணைமாண்பு படக் கைத்தொழில் வல்ல தச்சன் பொருத்துகின்றார். நெடுநிலைக் கதவாக இருப்பதால் பருவிரும்பு தேவைப்படுகிறது. இரும்பு, பட்டம் முதலியவற்றால் கதவை இணைக்கின்றனர். மரத்தால் ஆகிய கதவு என்பதால் செவ்வரக்கு பூசி மேடுபள்ளமின்றிச் செய்கின்றனர். இக்கதவுகளை ஒன்றோடு ஒன்று இணைக்கும் பொழுது சேர்க்கும் இடம் தோன்றாமல் ஒரே மரத்திற்செய்தாற் போன்று தோன்றுவதால் இரட்டையாய் மாட்சிமைப்பட்ட கதவு எனும் பொருளில் 'இணைமாண்டு' என்றனர். ஒன்றைப் போன்று மற்றொன்றும் அமைந்த இரட்டைக் கதவுகளைப் பொருத்தி அமைத்து நல்ல நாளில் வெட்டி அப்புறப்படுத்திய வலிவு அமைந்த சிறந்த மரத்தினால் செய்த அரும்பு மலர்கின்றது போன்ற குவளைப் பூவின் உருவமும், புதுமையாகச் செதுக்கிய பெண்யானை வடிவமும் பொருந்திய நிலைக்கால்களை அமைத்து பூட்டும் தாழோடு செறிந்து பொருந்துதல் அமைந்த

கோவையுடன் கைத்தொழில் வல்ல தச்சன் முடுக்குதலின் குற்றமற்று வெண்சிறுகடுகு அப்பியவாறு பொருந்தி இருக்கும் நெய்ப்பூச்சு அமைந்த நெடியநிலை என்றும் அக்காலத்திய தச்சர்களின் செய்தொழில் திறம் தோன்றப்பாடியுள்ளார்.

நெடுநல்வாடையில் அரசமாதேவியின் கட்டில் வனப்பை நக்கீரனார் கூறுகின்றபோது, நாற்பதாண்டு வயது நிரம்பியதும், முரசம் போன்ற கால்களை உடையதும், புள்ளி பொருந்திய நெற்றியை உடையதும் போரிலே விழுப்புண் பட்டு இறந்ததுமாகிய யானையினது தாமே வீழ்ந்த தந்தங்களைச் சீரும் செம்மையும் பொருந்தக் கைத்தொழில் வல்ல தச்சன் கூரிய உளியால் செதுக்கிச் செய்த பெரிய இலைத் தொழிலின் இடையே வைத்து, பக்கங்கள் திரண்டிருந்த குடத்தை உடையவாய், நடுவிடம் திரண்டு உள்ளிப் பூண்டின் வன்மையுடைய முதல்போல் குடத்தின் மேல் பொருத்திக் கால்களை அமைத்துப் பெரிய அளவு எய்திய பெரிய பெயருடைய பாண்டில் என்னும் வட்டக்கட்டில் அமைக்கப்பட்டிருப்பதை,

''தச நான்கு எய்திய பணைமருள் நோன்தாள்,
இகல் மீக்கூறும், ஏந்து எழில் வரிநுதல்
பொருது ஒழி, நாகம் ஒழி எயிறு அருகு எறிந்து
சீரும் செம்மையும் ஒப்ப, வல்லோன்
கூர் உளிக் குயின்ற, ஈர் இலை இடை இடுபு,
தூங்கு இயல் மகளிர் வீங்குமுலை கடுப்ப
புடை திரண்டிருந்த குடத்த, இடை திரண்டு,
உள்ளி நோன் முதல் பொருத்தி, அடி அமைத்து
பேர் அளவு எய்திய பெரும் பெயர்ப் பாண்டில்
மடைமாண் நுண் இழை பொலிய, தொடைமாண்டு,
முத்துடைச் சாலேகம் நாற்றி, குத்துறுத்து,
புலிப் பொறிக் கொண்ட பூங்கேழ்த் தட்டத்துத்
தகடு கண் புதையக் கொளீஇ, துகள் தீர்ந்து,
ஊட்டுறு பல்மயிர் விரைஇ, வயமான்
வேட்டம் பொறித்து, வியன் கட் கானத்து
முல்லைப் பல்போது உறழப் பூ நிரைத்து
மெல்லிதின் விரிந்த சேக்கை மேம்பட
துணை புணர் அன்னத் தூ நிறத் தூவி
இணை அணை மேம்படப் பாய், அணை இட்டு,
காடி கொண்ட கழுவுறு கலிங்கத்துத்
தோடு அமை தூமடி விரிந்த சேக்கை''
(நெடுநல்வாடை: 115 - 135)

என்ற நெடுநல்வாடையின் அடிகளில் குறிப்பிட்டுள்ளார்.

சிறுபாணாற்றுப்படையில் உமணர்கள் வளர்த்த குரங்குக் குட்டிக்கு உளியால் குடைந்து செய்த மரத்தாலான மணிமாலையை அணிவித்தனர் என்பதை,

"நறவுவா யுறைக்கு நாகுமுதிர் நுணவத்
தறைவாய்க் குறுந்துணி யயிலுளி பொருத
கைபுனை செப்பங் கடைந்த மார்பிற்
செய்பூங் கண்ணி செவிமுத றிருத்தி
........................ வந்த ............... மந்தி''
(சிறுபாணாற்றுப்படை: 51 - 56)

என்ற அடிகளால் அறியமுடிகின்றன.

சங்க காலத்தில் பொருளாதார நலனைப் பெருக்கும் வகையில் வாணிபம் சிறந்த நிலையில் இருந்தது. இவ்வாணிபத்திற்குத் தேவையான படகுகள், கப்பல்கள் கட்டும் தொழிலில் தச்சர்கள் சிறந்து விளங்கினர் என்பதை,

"ஆடியற் பெருநாவாய்
மழை முற்றிய மரைபுரைய"
(மதுரைக்காஞ்சி: 83 - 84)

"வெளில் இளக்கும் களிறு போலத்
தீம்புகாரத் திரைமுன்றுறைத்

தூங்கு நாவாய்”

(பட்டினப்பாலை: 173 - 175)

என்ற அடிகளால் வாணிபத்திற்கு மரங்கள் பயன்பட்டதை அறியமுடிகின்றன.

**முடிவுரை**

மக்கள் வாழ்வில் மரங்கள் எவ்வாறு எல்லாம் சிறப்புப் பெற்றிருந்தன என்பதை, சங்க இலக்கியங்கள் தோன்றிய காலத்திலேயே மரத் தச்சுத் தொழிலின் சிறப்பையும், மரத்தச்சர்களின் சிறப்பையும் அகநானூறு, புறநானூறு, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, நெடுநல்வாடை, பட்டினப்பாலை, மதுரைக்காஞ்சி, போன்ற இலக்கியங்களால் அறியமுடிகின்றன.

❑❑❑

# நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி

(தன்னாட்சி, தேசிய மீள்தர மதிப்பீடு, ஐ.எஸ்.ஓ. 9001:2015 தரச்சான்றிதழ் பெற்றது)

பொள்ளாச்சி - 642 001.

**தமிழ்த்துறை (அரசு உதவி)** மற்றும்

**நவீனத் தமிழாய்வு - பன்னாட்டுப் பன்முகத் தமிழ் ஆய்விதழ்**

**(UGC Approved Journal)**

*இணைந்து நடத்திய*

## பன்னாட்டுக் கருத்தரங்கம் (INTERNATIONAL SEMINAR)

**தமிழ் இலக்கியங்களில் சொல் வளமும் பொருள் வளமும்**

**16.12.2021 வியாழக்கிழமை**

# சான்றிதழ்

நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரித் தமிழ்த்துறையும் (அரசு உதவி) நவீனத் தமிழாய்வு பன்னாட்டுப் பன்முகத்தமிழ் ஆய்விதழும் இணைந்து 16.12.2021 அன்று நடத்திய **தமிழ் இலக்கியங்களில் சொல் வளமும் பொருள் வளமும்** எனும் பொருண்மையிலான பன்னாட்டுக் கருத்தரங்கில் கலந்துக் கொண்டு திரு / திருமதி / செல்வி / முனைவர் ம. காயத்ரி, உதவிப்பேராசிரியர், தமிழ் இலக்கியத்துறை, ந.க.ம. கல்லூரி அவர்கள் "சங்க இலக்கியத்தில் தச்சுத் தொழில்கள்" எனும் தலைப்பில் கட்டுரையாளராகக்/~~பார்வையாளராகக்~~ கலந்து கொண்டார் எனச் சான்றளிக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| B. Aruljothi | | | |
| முனைவர் பா. அருள்ஜோதி | முனைவர் மு. சாதிக்பாட்சா | முனைவர் ச. முத்துவேல் | முனைவர் ரெ. முத்துக்குமரன் |
| ஒருங்கிணைப்பாளர் | நவீனத் தமிழாய்வு | தமிழ்த்துறைத் தலைவர் | முதல்வர் |